**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.I, PUDUKKOTTAI.**

**CC.No. 57 /2021**

| | | |
|---|---|---|
| **Deposition Witness** | அ.சா. 6 | **Caste** |
| **Witness Name** | குமார் | **Calling** |
| **Father's Name** | பாலசுப்பிரமணியன் | **Religion** |
| **Village** | | **Age** |
| **Taluk** | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.02.2023.

**( எதிரி ஆஜரில்லை, எதிரி தரப்பில் கு.வி.மு.ச மனு 317 தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது) ).**

__முதல் விசாரணை__

1. நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், பூவரசக்குடியில் குடியிருந்து, மரமில்லில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையொப்பத்தினை 29.09.20 ம் தேதி மாலை 4.00 மணியளவில் புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில் வைத்து செய்து கொடுத்தேன். விபத்து தொடர்பாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விபரம் பற்றி சொன்னேன்.

__குறுக்கு விசாரணை__

2. என் வீட்டிற்கும் புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 10 கி.மீ இருக்கும். என்ன வாகனத்தில் வந்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் உள்ள சாமிநாதன் என்பவரை எனக்கு தெரியும் என்றால் தெரியாது. போலீசார் என்னை அழைத்து கையொப்பம் போட சொன்னார்களா என்றால் இல்லை. சம்பவம் இடம் அருகே கடைகள் உள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் எத்தனை கையொப்பம் வாங்கினார்கள் என்றால் ஞாபகமில்லை. எத்தனை போலீசார் எத்தனை பொதுமக்கள் இருந்தார்கள் என எனக்கு ஞாபகமில்லை என்றால் ஆமாம். என் முன்னிலையில் சம்பவ இடத்தில் வைத்து போலீசார் விாசரணை செய்யவில்லை என்றாலும் அங்கு வைத்து நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.I, PUDUKKOTTAI.**

**CC.No. 57 /2021**

| | | |
|---|---|---|
| **Deposition Witness** | அ.சா. 7 | **Caste** |
| **Witness Name** | சாமிநாதன் | **Calling** |
| **Father's Name** | ராஜகோபால் | **Religion** |
| **Village** | | **Age** |
| **Taluk** | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.02.2023.

**( எதிரி ஆஜரில்லை, எதிரி தரப்பில் கு.வி.மு.ச மனு 317 தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது) ).**

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், கீழக்குறிச்சியில் குடியிருந்து, சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையொப்பத்தினை 20.09.20 ம் தேதி மாலை 4.00 மணியளவில் புதுககோட்டை புதிய பேருந்து நிலையம் அருகில் விபத்து தொடர்பாக போலீசார் சம்பவ இடதிதை பார்வையிட்டு விசாரணை செய்ததற்காக அங்கு வைத்து செய்து கொடுத்தேன். போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.நடந்த விபரம் பற்றி சொன்னேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

2 அன்றைய தினம் நான் நடந்து தான் சென்றேன். பிரின்ஸ் லாட்ஜ் பக்கத்திலிருந்து பஸ் ஸ்டாண்டிற்குள் சென்றேன். விபத்தில் இறந்தவர் பற்றிய விபரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை அழைத்து கையொப்பம் இட சொன்னார்களா என்றால் இல்லை, நானாக தான் சென்று கையொப்பம் செய்தேன். காவல் நிலையத்தில் வைத்துஎத்தனை கையெழுத்து வாங்கினார்கள் என்றால் ஒரு கையொப்பம் பெற்றார்கள்.சம்பவ இடம் அருகே கடைகள் அதிகம் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவ இடத்தில் வைத்து என்முன்னிலையில் போலீசார் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தாயர் செய்யவில்லை என்றாலும், போசீலார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.I, PUDUKKOTTAI.**

**CC.No. 57 /2021**

| | | |
|---|---|---|
| **Deposition Witness** | அ.சா. 8 | **Caste** |
| **Witness Name** | சுரேஷ் | **Calling** |
| **Father's Name** | செல்லமணி | **Religion** |
| **Village** | | **Age** |
| **Taluk** | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.02.2023.

**( எதிரி ஆஜரில்லை, எதிரி தரப்பில் கு.வி.மு.ச மனு 317 தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது) ).**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், மச்சுவாடியில் குடியிருந்து, ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.09.20 ம் தேதி ஆட்டோவை கூப்பிட சென்ற விவேக் நாதன் மீது டிப்பர் லாரி மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், அவருக்கு வயிறு மற்றும் கால் பகுதியில் காயம் ஏற்பட்டு விட்டதாகவும், ரவி மனைவி தமிழ்செல்வி எனக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டார். நான் புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். மருத்துவ மனை சவக்கிடங்கில் போலீசர் பிரேவிசாரணை செய்தபோது நான் உடன் இருந்து அடையாளம் காட்டினேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விபரம் பற்றி சொன்னேன்.

**குறுக்கு விசாரணை இல்லை என எடுத்துரைக்கப்பட்டது.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.I, PUDUKKOTTAI.**

**CC.No. 57 /2021**

| | | | |
|---|---|---|---|
| **Deposition Witness** | அ.சா. 9 | **Caste** | |
| **Witness Name** | பழனிச்சாமி | **Calling** | |
| **Father's Name** | முத்துச்சாமி | **Religion** | |
| **Village** | | **Age** | |
| **Taluk** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.02.2023.

**( எதிரி ஆஜரில்லை, எதிரி தரப்பில் கு.வி.மு.ச மனு 317 தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது) ).**

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், திருக்கோகர்ணத்தில் குடியிருந்து, Transport தொழில் செய்து வருகிறேன். என்னிடம் நல்லபெருமாள் என்பவர் டிரைவராக வேலை செய்து வருகிறார். எனக்கு சொந்தமான TN-55-R-2782 என்ற டிப்பர் லாரியை 29.09.20 ம் தேதி அன்று லோடு ஏற்றி சென்றார். மதியம் சுமார் 12.30 மணிக்கு நல்லபெருமாள் எனக்கு போன் செய்து, புதுக்கோட்டை பேருந்து நிலையம் அருகே விபத்து ஏற்பட்டதாக சொன்னார். எனது வண்டி ஆவணங்களை காவல் நிலையத்திற்கு எடுத்து சென்றேன். பிறகு விபத்தாய்வு செய்து வாகனத்தை பெற்றுக்கொண்டேன். போலீசார் எனனை விசாரித்தார்கள். நடந்த விபரம்ப ற்றி சொன்னேன்.

குறுக்கு விசாரணை

2. ஓட்டுனர் நல்ல முறையில் ஓட்டிவருவபர் என்றாலும், இதற்கு முன்னால் அவர் எந்த விபத்தும் ஏற்படுத்தில்லை என்றால் சரிதான். நான் விசாரித்த வகையில் மதுரை மருத்துவமனைக்கு சென்று விட்டு திரும்ப புதுக்கோட்டைக்கு வரும்போது திடீரென சாலை தடுப்பு சுவறிலிருந்து கீழே விழுந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**